1982 ஏப்ரல் 1] (முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தார் போட முடியாத சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, ரப்பர் போடவேண்டும் என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வேண்டுமானால் போடலாமே தவிர, பாக்கியிருக்கும் மாவட்டங்களில் போடுவதற்கு ரப்பர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாரை விட ரப்பர் 10 மடங்கு விலையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட போடுவதற்கு முடியாது.

சென்னை நகரைச் சுற்றி புற வழிச் சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 708—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை சுற்றி Bye-pass சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 45, 4 மற்றும் 5-ஐ இணைத்து சென்னை நகருக்கு புற வழிச்சாலை அமைக்கும் வேலையின் மதிப்பு 1980–81 வீதங்களைத் தழுவி ரூ. 995 இலட்சம் ஆகும். இச்சாலையின் மாற்றப்பட்ட நேர்பாடானது இந்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு, அது தற்பொழுது மத்திய அரசின் நிதிக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட 1980–85 ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 240 இலட்சம் நில உரிமைக்காகவும் மண்வேலைக்காகவும், வடிகால் வசதிக்காகவும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. நில உரிமை பெறல் மதிப்பீடு முடிவாகும் தருவாயில் உள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைச் சுற்றி பை-பாஸ் சாலை அமைக்கும் திட்டம் மிகவும் அவசியமானது. அதேநேரத்தில் சென்னை நகரில் பூமிக்கடியில்—பாதாள ரயில் விடும் திட்டம் பற்றி மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரிடம் பேசப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி 'பை-பாஸ்' ரோடு பற்றியதாகும்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, அண்மையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் டெல்லி சென்று மத்திய அமைச்சர் வீரேந்திர பாட்டில் அவர்களைச் சந்தித்ததாக செய்தி வந்து இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி பேசியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் கிழக்குக் கடற்கரைச் சாலை பற்றி அவர்களிடத்தில் அமைச்சர் பேசினாரா என்பதையும், மத்திய அரசு அதை உடனடியாக எடுத்துக் கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சட்டமன்றத்திலேயே அறிவித்து இருக்கிறேன். 'கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் முக்கியமான சாலை அந்தச் சாலையை மைய அரசு உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், மற்றும் உற்ற தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்கும் திட்டத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும்—புதிய நெடுஞ்சாலைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை—ஆகவே, முக்கியமான சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தவேண்டும் என்பதற்காகவும் கோரிக்கை வைத்தோம். அவர்கள் ஈஸ்ட் கோஸ் ரோடு—கிழக்குக் கடற்கரை ரோட்டிற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கித் தருவதாக மாண்புமிகு வீரேந்திர பாட்டீல் அவர்கள் என்னிடத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். அதேபோல், கோயம்புத்தூர் புறவழிச் சாலைக்கும் இந்த ஆண்டு 50 லட்சம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டதற்கு, அவர்களும் ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதேபோல் பாக்கியிருக்கும் நெடுஞ்சாலைகளையும் பற்றி அடுத்த ஆண்டில் பரிசீலிப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, இப்போது சென்னை நகரைச் சுற்றி 'பை-பாஸ்' ரோடு அமைப்பதற்காக 9 கோடி ரூபாய் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இன்னும் பல கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கின்றது. எனவே அத்தகைய கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பதற்காக இந்தப் பணத்தைச் செலவழித்து, எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை போட்டபிறகு, இப்படிப்பட்ட 'பை-பாஸ்' ரோடு அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா?

1982 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை பற்றியபிரச்னை. இது மத்திய அரசின் திட்டத்தின் கீழ் செய்யப்படுகிறது. இணைப்புச் சாலை அமைப்பதைப் பொறுத்தவரையில், இந்தநிதியில் இருந்து கிராமங்களுக்குப் போடமுடியாது. அதற்காக நாம் தன்னிறைவுத் திட்டம் வைத்து இருக்கிறோம். அதேபோல் ரூரல் ரோட் ஒர்க்ஸ் என்று தனியாக வைத்து இருக்கிறோம். அந்தப் பணிகள் மூலமாக இந்த இணைப்புச்சாலைகள் போடுவதைச் செய்யலாம்.

தன்னிறைவு திட்ட வேலைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொறியாளர்கள்.

* வினா எண் 709—திருமதி டி. யசோதா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்கு சிவில் இன்ஜினியர்களை (Civil Engineers) நியமிக்காமல் மெக்கானிக்கல் இன்ஜினியர்களை (Mechanical Engineers) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) இதனால் வேலைகள் காலதாமதம் ஏற்படுகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தன்னிறைவுத் திட்டத்தில் பணிபுரியும் உதவிக் கோட்டப் பொறியாளர்களில் சுமார் 23.9 சதவிகிதமும் உதவிப்பொறியாளர்/இளநிலைப்பொறியாளர் தொகுதியில் சுமார் 3 சதவீதமும் மட்டுமே மெக்கானிக்கல் பொறியியல் தகுதி வாய்ந்தவர்கள். மற்றவர்கள் சிவில்பொறியாளர்கள்.

(ஆ) இல்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெக்கானிக்கல் என்ஜினியர்களாக இருப்பவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்க வருகின்ற நேரத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கட்டிடம் கட்டுவது, சாலை அமைப்பது, குளம் வெட்டுவது போன்ற ஆரம்ப கட்ட வேலைகளைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பதால், அந்தப் பணிகள் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று அறிகிறேன். அதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.